# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கைக்குழு

பெறுதல்: நாள் :.10.05.2021

**மாண்புமிகு மின்துறை,மதுவிலக்கு மற்றும்**
**ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு,சென்னை**

ஐயா,

**பொருள்:** கொரோனா தொற்றுநோய் பாதிக்கப்பட்டு மின்ஊழியர்கள் உயிரழப்பு அதிகரித்து வருவது – முன்களப்பணியாளர்களாக அறிவிக்கக் கோருவது– எண்ணூர் அனல்மின் நிலைய குடியிருப்பில் சிறப்பு கொரோனா மருத்துவ சிகிச்சை மையம் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்வது– குறைந்தபட்ச ஊழியர்களைக் கொண்டு மின் விநியோகம் வழங்கிட கோரிக்கை – நோய்த்தொற்றை தடுத்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுத்திட வேண்டுவது குறித்து

**மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கனிவான பரிசீலனைக்கு, வணக்கம்.**

தமிழக மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தமிழக முதல்வராக பதவியேற்றுள்ள மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் நம்பிக்கைக்குறிய அமைச்சராக பொறுப்பேற்றுள்ள தங்களின் மக்கள்பணி சிறக்க மின்வாரிய தொழிலாளர்கள், அலுவலர்கள், மற்றும் அதிகாரிகளின் சார்பில் இதயபூர்வ வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தற்போது தமிழகத்தில் கோவிட்–19 இரண்டாம் அலை நோய்த்தொற்று வெகுவேகமாக பரவி வருவதின் காரணமாக மின்வாரிய ஊழியர்கள் பலர் உயிரழந்து வருகின்றனர்.

எனவே அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட பிரதானமான கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து உடனடி தீர்வு கண்டிட வேணடுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

1. தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் அனைவரும் தடையற்ற மின்சாரத்தை பராமரித்திட உயிரை பணையம் வைத்து வேலைசெய்து வருவதால் மின்ஊழியர்களையும் முன்களப்பணியாளர்களாக அறிவித்திட வேண்டுகிறோம். அனைத்து ஊழியர்களுக்கும் உடனடியாக தடுப்பூசி போட்டிட உரிய ஏற்பாடுகளை வட்ட, கோட்ட அளவில் போர்கால அடிப்படையில் செய்திட வேண்டுகிறோம்.

2. சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் தினந்தோறும் நோய்த்தொற்று அதிகரித்த வண்ணம் இருப்பதால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கைகள் இல்லாமல் மின்ஊழியர்களும், மின்ஊழியர் குடும்பங்களும் தடுமாறி வருகின்றனர். இத்தகைய நெருக்கடியை தவிர்த்திட நூற்றுக்கும் மேற்பட்ட *எண்ணூர் அனல் மின்நிலைய குடியிருப்புகள் சுமார் 46* லட்சம் செலவு செய்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டால் 500 – க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகளை ஏற்படுத்தி தனிமைப்படுத்திட வேண்டிய நோயாளிகளை இங்கே அனுமதித்து மருத்துவம் பார்த்திட உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறோம். இதே போன்ற சூழல் நிலவி வரும் பிற மாவட்டங்களிலும் அத்தியாவசிய பணியில் ஈடுபட்டுவரும் மின்ஊழியர்களுக்கு கொரோனா அவசர சிகிச்சை மையங்களை உருவாக்கிட உரிய ஏற்பாடுகளை உடனடியாக செய்திட வேண்டுகிறோம்.

3). மேலும் மின்ஊழியர்கள் பாதுகாப்புடன் பணிக்கு சென்று வருவதை உறுதி செய்திடும் வகையில் அடையாள அட்டை காட்டப்பட்டால் தடை ஏற்படுத்திடாமல் அனுப்பி வைத்திட காவல்துறையினருக்கு உரிய அறிவுரை வழங்கிடவும் நடவடிக்கை எடுத்திடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

| | | | |
|---|---|---|---|
| தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் | கணக்காயர் களத் தொழிலாளர் சங்கம் | மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | T. Jeyasankar<br>தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (சி.ஐ.டி.யு) |

| | | | |
|---|---|---|---|
| மின்சாரப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம் | மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம் | ஐ.என்.டி.யு.சி (சேவியர்) | ஐ.என்.டி.யு.சி (சொர்ணராஜ்) |
| மின்வாரிய பொறியாளர் சங்கம் | தமிழ்நாடுமின்ஊழியர் காங்கிரஸ் என்.எல்.ஓ | தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் (HMS) | மின்வாரிய பொறியாளர் கழகம் |
| கணக்கு அலுவலர் சங்கம் | அட்டைப்பட்டியல் பணியாளர் சங்கம் CBSU | *TNEB* Dr.அம்பேத்கார் எம்ளாயீஸ் யூனியன் | மின்வாரிய பொறியாளர் யூனியன் |
| எம்ளாயீஸ் பெடரேசன் | | | |